பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹூ சித்திரை மீ 11 உ புதன்கிழமை [24-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily ஒளி: 14

## ஷெல் வீச்சு

நேற்றுக் காலை 9 மணியள வில் பலாலி இராணுவ முகா மிலிருந்து வல்வெட்டித்துறை பகுதிகளை நோக்கி ஐந்து ஆறு ஷெல்கள் ஏவிவிடப்பட் டன. இதனால் இரண்டு வீடு கள், ஒரு கடை என்பன சேதம் அடைந்தன. [உ]

## 39 பேர் பலி!

நியூயோர்க், ஏப். 24

மத்திய அமெரிக்காவின் பனாமா, கோஸ்ரறிக்கா பகுதி களில் நேற்று இடம்பெற்ற பூமியதிர்ச்சியினால் 39 பேர் பலியானார்கள். [ஒ-5]

# பாதுகாப்பு ஏற்பாடுகள் கொழும்பு நகரில் தீவிரம்!

## குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம் என அரசு அச்சம்

கொழும்பு, ஏப்ரல் 24

கொழும்பு மாநகரில் கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட் டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நிகழலாம் என்ற அச்சத்தின் காரணமாக வழமைக்குமாறாக இம்முறை மேதினத்துக்கு ஒரு வார காலத்துக்கு முன்னரே நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

பல இடங்களிலும் வீதித் தடைகளை ஏற்படுத்தி வாக னங்களை வழி மறித்துச் சோதனையிடுவதில் பாதுகாப் புப் படையினர் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

வாகனங்கள் மூலம் ஆயுதங் கள் மற்றும் வெடிமருந்துகள் நகரினுள் கொண்டுவரப்படு வதைத் தடுக்கும் முகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாகக் கூறப்படு கிறது.

தெற்கில் ஜே. வி. பி. மீண் டும் தலைதூக்கியிருப்பதாகச் செய்திகள் வெளியாகியிருக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### தூதரக ஊழியர் மீது தாக்கு:

## இந்தியாவிடம் இலங்கை வருத்தம் தெரிவிக்கிறது

கொழும்பு, ஏப். 24

கொழும்பில் உள்ள இந்தி யத் தூதரக ஊழியர் ராஜேந் திரன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மூன்று பொலீ ஸார் தற்காலிக வேலை நீக் கம் செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை ராஜேந்திரனை பொலீஸார் கைது செய்து, பின்னர் கொள்ளுப்பிட்டி பொலீஸ் நிலையத்தில் வைத்து அவ ரைத் தாக்கினார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டிருந் தது.

இச்சம்பவம் தொடர்பாக இந்தியா இலங்கை அரசிடம் ஆட்சேபனை தெரிவித்திருந் தது.

இதனிடையில் தூதரக ஊழி யர் ராஜேந்திரனை பொலீ ஸார் தடுத்து வைத்த சம்ப

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மேதினத்தை எழுச்சிபூர்வமாக வடக்கில் கொண்டாட ஏற்பாடு

## பெரிய அளவிலான ஊர்திகளும் தயார்

யாழ்ப்பாணம், ஏப். 24

வடபகுதியில் இம்முறை மேதினத்தை வெகு எழுச்சி பூர்வமாக கொண்டாடு வதற்கு முழுமூச்சுடன் ஏற் பாடுகள் நடைபெற்று வரு கின்றன.

பிரமாண்டமான முறையில் பேரணிகள், கூட்டங்களை நடத்துவதற்கான முன் முயற் சிகள் யாவும் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் சுதந்திர தாகத்தை உலகுக்கு காட்டும் வகையில் இம்முறை மேதினம் அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

மேதினப் பேரணிகளில்— கூட்டங்களில் — பெரும் எண் ணிக்கையான மக்கள் இம் முறை கலந்து கொள்வர் என்று நம்பப்படுகிறது.

பேரணியில் பெரிய அளவி லான ஊர்திகளும் எடுத்துச் செல்லப்படவுள்ளன. ப. நோ. கூ. சங்கத்தின் தொழிற் சங்கங்கள் ஏழு பெரிய ஊர்தி களையும், கருத்துப் படங் களையும் உருவாக்குவதில் ஈடுபட்டு வருகின்றன

வடமராட்சி, தென்ம ராட்சி பகுதிகளிலும் மேதி

[6 ஆம் பக்கம் பார்க்க]

# மருதனார்மடத்தில் இருந்து பிரமாண்டமான மக்கள்பேரணி

யாழ்ப்பாணம், ஏப். 24

மேதினத்தை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி மருதனார்மடத்தில் இருந்து நல்லூர் வரை மாபெரும் பேரணி ஒன்றை நடத்துவ தற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டு வருகின்றன. பேரணி யின் இறுதியில் பொதுக்கூட் டம் ஒன்றும் நடத்தப்படும்.

இந்தப் பேரணியிலும் பொதுக்கூட்டத்திலும் பல்லா யிரக் கணக்கானோர் கலந்து கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மேதின ஏற்பாடுகள் தொடர்பான அனைத்துத் தொழிற் சங்கங்களின் கூட் டம் ஒன்று விடுதலைப் புலி கள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட செயலகத் தில் நேற்றுக் காலை நடை பெற்றது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி, பிர சாரப் பொறுப்பாளர் பரா, யாழ். மாவட்ட அரசியல் நிர் வாகப் பொறுப்பாளர் ராஜன்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் சண்டை; ஷெல் தாக்குதலும் நடந்தது

காரைநகர் படையினர் நேற்று நண்பகல் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பிற்பகல் 2 30 மணியள வில் ஹெலி ஒன்றும் வலந்த லைப் பக்கமாக தாக்குதல் நடத்தியது.

இதேவேளை—

நேற்று அதிகாலை 12.30 மணியளவில் காரைநகர் முகா மில் இருந்து 'பரா' வெளிச் சக் குண்டுகள் ஏவிவிடப் பட்டு, ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதிகாலை வேளை விடுத லைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா படையினருக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை யும் நடைபெற்றது.

சேத விவரம் தெரியவர வில்லை.

## ஸ்ரீசந்தி முரளி



அடிச்சுப் போட்டு மன்னிப்

## செங்கலடியில் கண்ணி! இரு படையினர் மரணம்!!

நேற்றுக்காலை 9 மணியள வில் மட்டக்களப்பு கொம்மா துறை முகாமிலிருந்து செங்க லடி இராணுவ முகாம் நோக் கிச் சென்று கொண்டிருந்த படையினர் மீது செங்கலடி முகாமிலிருந்து ஐநூறு யார் தூரத்தில் வைத்து விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி னர்.

இந்தத் தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் உயிரிழந்தனர். இந்தச் சம்ப வத்தில் முஸ்லிம் நபர் ஒரு வரும் உயிரிழந்ததாக கொழும்பில் இராணுவ வட் டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தாக்குதலின் போது—

- ★ ரி56 - 1 ரகத் துப்பாக்கி - 2
- ★ அதற்குரிய மகஸின் - 2
- ★ ஐ எம். ரவைகள் - 60

ஆகியன தங்களால் மீட்கப் பட்டதாக விடுதலைப் புலி கள் வட்டாரங்கள் தெரிவித் தன. [உ-எ-5]

## ஓமந்தைப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஏப் 24

ஓமந்தை கொந்தக்காரன் குளம் பகுதியில் நேற்றும் நேற்று முன்தினமும் விமா னக் குண்டு வீச்சுத் தாக்கு தல்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் மாலை 5 30 மணியளவில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் இப்பகுதியில் நான்கு குண்டு களை வீசின. இதனால் 4 பொதுமக்கள் காயமடைந்த னர். ஒரு வீடு சேதமடைந் தது.

தணிகாசலம் தங்கலட்சுமி [வயது 30]. மகாராஜா [தயாநிதி [வயது 19], சி. தவ ராசா [வயது 32], தவராசா பத்மாவதி [வயது 27] ஆகி யோரே காயமடைந்தனர்,

நேற்றுக் காலை 8 மணிய ளவிலும் இரண்டு குண்டு வீச்சு விமானங்களும் ஹெலி கொப்டர் ஒன்றும் இப் பகு தியில் வானத் தாக்குதல்களை நடத்தின.

இதனால் ஒரு வீடு சேத மடைந்தது. இரண்டு மாடுகள் உயிரிழந்தன. பல மரங்கள் முறிந்து விழுந்தன.

### பிந்திய செய்தி:

நேற்றுமாலை 4 மணியள விலும் ஓமந்தையில் பொம்மர் குண்டுவீச்சு நடத்தப்பட்டது. ஒரு வீடு சேதமானது. அங் கிருந்த சிலர் படுகாயமடைந் ததாகத் தெரிவிக்கப்பட்டது. விவரம் தெரியவரவில்லை, [உ-5]

## கடற்படை படகு மீது வல்வையில் புலிகள் தாக்கு

வல்வெட்டித்துறை கடற் பகுதியில் நேற்றுக் காலை 9-30 மணியளவில் கடற் படையினரின் விசைப்படகு ஒன்றின் மீது விடுதலைப் புலி கள் கலிபர் தாக்குதலை நடத்தினர்.

அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி படையினரின் விசைப் படகு வந்துகொண்டிருந்தது —அப்போதோ படகு மீது புலி கள் தாக்குதல் நடத்தினர்.

அதை அடுத்து படையினர் பின்வாங்கிச் சென்றனர். [ஒ-5-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S. L. P. S.

## இலங்கை அதிபர்கள் சேவை

தரம் 1, 2, 3 போட்டிப் பரீட்சைக்கான

## துரித பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 27 - 04 - 1991 8 30 மணி

பாடங்கள்: கல்விக் கொள்கையும் நிர்வாகமும்; பொது அறிவு, கிரகித்தல்.

முழுக் கட்டணம்: 250/-

★ கல்விச் சேவை விரிவுரையாளர்கள்?
★ பாடக் குறிப்புகளும், மாதிரி வினா-விடைகளும் இலவசம்.
★ Limited Number in Each Class

**வணிக முகாமைத்துவக் கல்லூரி**
**(School of Business Administration)**
16, 3 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.

[கி-4850]


# நன்றி நவிலல்

## திருமதி பாக்கியம் மதியாபரணம்

உரும்பராய் கிழக்கு சேச் லேனில் வசித்த திருமதி பாக்கியம் மதியாபரணம் 20 04-1991 காலை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-04-1991 மாலை நடைபெற்றது. இவர் காலஞ் சென்ற பண்டாரம் மதியாபரணத்தின் அன்பு மனைவியும், திருமதி ஜெகதீஸ்வரி நடராசா [ஆசிரியை வயாவிளான் ம. ம. வித்தியாலயம்], திரு. பாலசுப் பிரமணியம் [Chinese Park View Lodge, Colombo], காலஞ்சென்ற திருமதி சிவலோகேஸ்வரி, சிவதாசன், திருமதி கருணேஸ்வரி விவேகானந்தன் [லண்டன், முன்னாள் மருந்தாளர், யாழ் அரசினர் வைத்திய சாலை] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. இ. நடராசா [நிறைவேற்றுப் பொறியியலாளர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மதவாச்சி], திருமதி கிரிஜா தேவி பாலசுப்பிரமணியம், திரு. தி. சிவதாசன் [இலங்கை வங்கி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்], திரு. கு. விவேகானந்தன் [லண்டன், இளைப்பாறிய கூட்டு றவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்], ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலமுருகுந்தன், பாலராஜினி [St. Bridget Convent], கோகிலா [உடுவில் மகளிர் கல்லூரி], அரவிந்தன் [லண்டன்], மயூரன் [லண்டன்], வைதேகி [லண்டன்] ஆகியோரின் அன்புப் பேர்த்தி யாருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். ஈமக்கிரியைகளில் பங்குபற்றியோருக்கும், எமக்குப் பலவழிகளில் உதவியோருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ஜெ. நடராசா

[4036]

# மரண அறிவித்தல்கள்

## அல்பேர்ட் செல்வராஜன் இராமலிங்கம்

[இளைப்பாறிய தபாலதிபர்]

அல்பேர்ட் செல்வராஜன் இராமலிங்கம் காலமானார்.

அன்னார் திரவியத்தின் அன்புக் கணவரும், திருமலர் [ஆசிரியை], மகிழ்மலர், ஆனந்தராஜன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், மாணிக்க சிங்கம் [இ. போ. ச.], நிமலரஞ்சிதம் [கனடா] ஆகியோரின் மாமனாரும் நிரோஷன், சுதர்சன், நிலாணி, நியோமி ஆகியோரின் பேரனும் ஆவார்.

நல்லடக்க ஆராதனை 23 - 04 - 1991 மூன்று மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

தகவல்:
திரவியம்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி,

[16568]

## திருஞானசம்பந்தர் பரமேஸ்வரன்

[கொ. இ. கல்லூரி பழைய மாணவரும், யாழ். பல்கலைக்கழக வணிகபீடத்திற்குத் தெரிவானவரும்]

தி. பரமேஸ்வரன் 19-04-1991 அன்று அகால மரணமடைந்துள்ளார். இவர் பிறவுண் வீதியைச் சேர்ந்த ஆறுமுகம் திருஞானசம்பந்தர், கமலாம்பிகை தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ஞானேஸ்வரன் [யா. இ. கல்லூரி பழைய மாணவன்], நகுலேஸ்வரன் [கொ. இ. கல்லூரி], கோடீஸ்வரன் [யாழ். மத்திய கல்லூரி], விக்னேஸ்வரன் [யாழ். இந்துக் கல்லூரி], தர்மவாணி, பிரதீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. நகுலேஸ்வரன்
[சகோதரன்]

193/1, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம்.

[16573]

## வீட்டோ முறை; விலக்கி கொள்ள வற்புறுத்து

ஸ்ரொக்ஹோம், ஏப் 24

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டோ ரத்து அதிகாரத்தை விலக்கிக் கொள்ள வேண்டும் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.

ஸ்ரொக்ஹோமில் நடைபெற்று முடிந்த அறிஞர்கள் குழுக் கூட்டத்தில் இந்த யோசனை தயாரிக்கப்பட்டது.

முந்திய மேற்கு ஜேர்மனியின் முன்னாள் பிரதமர் விலி பிராண்ட், சுவீடிஷ் பிரதமர் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

[ஒ-எ]

## அப்துல் சமது புது கூட்டணியில்

சென்னை, ஏப் 24

தமிழ் நாட்டில் அப்துல் சமது தலைமையிலான இந்திய மூஸ்லிம் லீக், பாட்டாளி மக்கள் கட்சி தலைமையிலான கூட்டணியில் நேற்று சேர்ந்து கொண்டது.

இத்தகவலை அப்துல் சமது நேற்று செய்தியாளரிடம் வெளியிட்டார்.

இதுவரை காலமும் அ. தி. மு. க.—இந்திரா காங்கிரஸ் கூட்டணியில் சமது பிரிவு இந்திய முஸ்லிம் லீக் அங்கம் வகித்து வந்தது தெரிந்ததே.

[ஒ-எ]

## 'குமுதினி' இடைவழியில் திரும்பியது

நெடுந்தீவு, ஏப் 24

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு நேற்று முன்தினம் பிற்பகல் பயணிகளுடன் புறப்பட்ட 'குமுதினி' படகை படையினர் குறிகாட்டுவானுக்குத் திருப்பி அனுப்பினர்.

பயணிகளை இறக்கிவிட்டு படகை நயினாதீவுக்குக் கொண்டு வருமாறும் படையினர் உத்தரவிட்டனர்.

நேற்றுக் காலை 'குமுதினி' நயினாதீவில் நங்கூரமிடப்பட்டிருந்ததாகத் தெரியவந்தது.

நயினாதீவு முகாம் பால வேலைகள் நடைபெறுவதாம். வேலைகள் முடியும் வரை நெடுந்தீவு படகுச் சேவை நடைபெறமாட்டாது என எதிர்பார்க்கப்படுகிறது.

[ஒ-111]

## பட்டதாரி பயிலுநருக்கு ரூ.300 அலவன்ஸ்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட பட்டதாரி பயிலுநர்களுக்கு 300 ரூபா அலவன்ஸ் வழங்கப்படவிருக்கிறது.

மாகாண சபையால் 2, 000 ரூபா அலவன்ஸுடன் நியமிக்கப்பட்ட இவர்களுக்கு கடந்த நவம்பர் முதல் அரசால் வழங்கப்படும் 300ரூபா அலவன்ஸையும் சேர்த்து வழங்குவதென மாகாணசபை முடிவு செய்துள்ளது.

[இ-3]

## இன்றைய உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

ஏழாலை பெரியதம்பிரான் கோவில் வருடாந்தப் பொங்கல் உற்சவமும், தீக்குளிப்பும் இன்று புதன்கிழமை நடைபெறும். [இ-த]

★

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

நீர்வேலி கந்தசுவாமி [illegible] கிழமை நடைபெறும்.

[இ-த]

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் அ. ஜெபநேசன்

இவர் மன்னார் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைப்பிரிவு [ஆங்கிலம், மொழியியல், நாடக அரங்கியல்] மாணவனுமாவார். இவர் சுகயீனமுற்று மடு அகதிமுகாமில் 11-04-91 இல் காலமானார்.

தகவல்:
சகோ. வ. பி. இராசநாயகம்

[16512]

## ஆறுமுகம் அன்னமுத்து

[இளைப்பாறிய ஆசிரியர்
ஆயிலி சிவஞானோதய வித்தியாசாலை]

காரைநகர் கருங்காலியைச் சேர்ந்த திருமதி ஆறுமுகம் அன்னமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆறுமுகத்தின் [ஆசிரியர்] அன்பு மனைவியாரும் தர்மராசா [வாரிகாவற்றுறை பிரதேச அலுவலகம் காரைநகர் வடக்கு] தியாகராசா [சுவிஸ்], சிறிஸ்கந்தராசா [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும் கோமளாம்பிகை, கலாசினி [சுவிஸ்], சிவமலர் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் குகன், கரன், துஸி [சுவிஸ்], விசி [சுவிஸ்], றோசினி [பிரான்ஸ்] ஆகியோரின் அன்புப் பேத்தியாரும் ஆவார். அன்னாரது நல்லடக்கம் 24 - 04 - 1991 இன்று புதன் காலை 9 மணிக்கு சாம்பலோடை மயானத்தில் நடைபெறும் இத்தகவலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
ஆ. தர்மராசா

[16513]

## செல்லத்துரை தம்பிஐயா

மல்லாகம் சோடாக் கொம்பனி ஒழுங்கையை பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் [Trinity College Kandy] செல்லத்துரை தம்பிஐயா அவர்கள் லண்டனில் 20 - 4 - 91 இல் காலமானார்.

அன்னார் காலம் சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் திருமதி ஸ்கந்தவதனி றெஜினோல்ட் [லண்டன்], ஸ்கந்தமோகன் [அவுஸ்ரேலியா], திருமதி ஸ்கந்தரூபினி ஜெயசிங்கம் [சிங்கப்பூர்], ஸ்கந்தவரதன் [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
சி. திலகராஜா
[மைத்துனர்]

திருநெல்வேலி
[16577]

## திருமதி கண்மணி தாமோதரம்பிள்ளை

திருமதி கண்மணி தாமோதரம்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற கூட்டுறவுப் பரிசோதகர் தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி சிவகாமி [லண்டன்], திரு. சிவகுரு [முன்னாள் S. K. இலங்கை போக்குவரத்து சபை], திரு சிவபாலன் [கச்சேரி வவுனியா], திருமதி சிவசோதி, திருமதி சிவநாயகி [லண்டன்], திருமதி சிவயோகம், திருமதி சிவராணி, திரு. சிவானந்தன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. நடராஜா [லண்டன்], திருமதி இமல்டா [தபாற் கந்தோர், வவுனியா], திருமதி விமலா [ஆசிரியை, வவுனியா], திரு. அருணா செல்லத்துரை [ரூபவாஹினி கூட்டுத்தாபனம்], திரு. கனகசபை [லண்டன்], திரு. வைகுந்தநாதன் [கச்சேரி, வவுனியா], திரு. நல்லநாதன் [பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், யாழ்ப்பாணம்], திருமதி மாலினி [ஜேர்மனி] ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது வவுனியா இல்லத்தில் இன்று நடைபெறும்.

42, வைரவர் கோவில் வீதி,
வவுனியா.

தகவல்:
திரு. ந. நல்லநாதன்
இல. 7, கைலாச பிள்ளையார் பின் வீதி,
நல்லூர்.

[16579]

## திருமதி றீற்றம்மா தியாகராசா

நல்லூர் ஆசீர்வாதப்பர் கோவிலைச் சேர்ந்த திருமதி றீற்றம்மா தியாகராசா அவர்கள் கொழும்பில் 21 - 4 - 91 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் திரு தியாகராசா அவர்களின் அன்பு மனைவியும் திரு. கிறிஸ்ரி வசந்தராசா [பிரான்ஸ்], திருமதி வதனி ஜெயசிங்கம், செல்விகள் காமினி, மாலினி, அனஸ்ரி வதனராசா [டோல்] [பிரான்ஸ்], செல்வி நளாயினி, செல்வன் வெஸ்லி வண்ணராசா அவர்களின் அன்புத் தாயாரும் திரு. செ. ஜெயசிங்கத்தின் அன்பு மாமியாரும் தினேஸ்குமார், கிரிசாந்தி ஆகியோரின் அன்புப் பேத்தியும் திரு. ம. செ. அலெக்ஸ்சாண்டர் [விரிவுரையாளர்], திரு. ம. சிங்கராசா, திருமதி கேதாரம் செல்வதி, காலஞ்சென்ற திருமதி துரைசாசா தேவமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இல்லத்திலிருந்து பூதவுடல் நல்லடக்கத்திற்காக இன்று பி. ப. 4 மணி அளவில் கொழும்பு சேன்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திரு. செ. ஜெயசிங்கம்

ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

[16516]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுச் சலவைக்கு
அதிசக்தி வாய்ந்த
மில்க்வைற்
திரவ சவர்க்காரம்

அழுக்கைத் துரிதமாகப் போக்கி துணிகளுக்குப் பளிச்சிடும் வெண்மையைத் தருகிறது

அரைப்போத்தல் ரூபா 45/- மட்டுமே

பத்துக்கும் மேலாக வாங்குவோருக்குப் போத்தலுக்கு ரூபா 5/- விசேட கழிவு;

எல்லாக்கடைகளிலும் ப. நோ. கூ; சங்கங்களிலும் விற்பனையாகிறது.

— மில்க்வைற்.

[இ-5124]



யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்
பட்டப்பின்
படிப்பிற்காகப்

## பதிவு செய்தல் - 1991

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 1990/91 கல்வியாண்டின் பின்வரும் பாடநெறிகளுக்கு பட்டப்பின் படிப்பிற்காக தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 31-5-1991 வரை கோரப்படுகின்றன.

பொருளியல், கல்வியியல், புவியியல்,
இந்து நாகரீகம், அரசியல், சமஸ்கிருதம்,
வரலாறு, தமிழ், மெய்யியல், மொழியியல்,
கிறிஸ்தவ நாகரீகம், சித்த மருத்துவம், நுண்கலை.

விண்ணப்ப படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ 22 04-1991 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவுக்கான காசுக்கட்டளை அல்லது தபால் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டி 38 25 செ. மீ. அளவுடைய தபால் உறையினையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 31-5-1991 க்கு முன்பாக, கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். 31-5-1991 இற்குப் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

- பதிவாளர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
18-4-1991 [இ/5122]



## கம்பியூட்டர் பயிற்சி

மானிப்பாயில் IDP யின் சேவை ஆரம்பம்:

★ I D P யின் யாழ். தலைமையகமும் மல்லாகக் கிளையும்
மானிப்பாய்க்கு
இடம் மாற்றப்பட்டுள்ளன.

BASIC, D-BASE - III + COURSES

● புதிய பிரிவுகள் ஆரம்பம்: 28-04-1991
[Weekday & Weekend Batches]

● விண்ணப்ப முடிவு திகதி: 27-04-1991

குறிக்கப்பட்ட முதல் பதிவுகளுக்கு 10% கழிவு கொடுக்கப்படும்

Managing Director — K. THALAYASINGAM
Administrator — T. CHANDRAKUMAR

IDP Computer Centre
MANIPAY ROAD, MANIPAY.
[மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு சமீபாகவுள்ள மேல்மாடி]
★ SPOKEN ENGLISH வகுப்புகளும் நடைபெறும்.
[C-5118]


# ஜனசக்தி சேமிப்பு முத்திரைகளை கிராம வங்கியிலேயே வைப்பிடலாம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24
ஜனசக்தி உதவி பெறுவோர் தமது சேமிப்பு முத்திரைகளை தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளிலோ, தபால் நிலையங்களிலோ இனி வைப்பிலிட முடியாது;

தபால் மா அதிபர் இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்றை அரச அதிபர்களுக்கு அனுப்பியுள்ளார்.

இந்தச் சேமிப்பு முத்திரைகளை இனி கிராம வங்கிகளிலேயே வைப்பிலிட முடியும் என்றும் அந்த சுற்றுநிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

## பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24
யாழ். பல்கலைக்கழக பட்டதாரிகளுக்கான பட்டமளிப்பு வைபவம் ஜூலை மாதம் ஆறாம் திகதி நடைபெற இருக்கிறது.

பட்டமளிப்புக்கான பதக்கம், உடை ஆகியவற்றில் மாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

## அகதிகளுக்கு நிவாரணம்

புளியங்கூடல், ஏப்ரல் 24
இராணுவ நடவடிக்கைகளால் ஊர்காவற்றுறையில் இருந்து இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு அகில இலங்கை கிறிஸ்தவ வாலிபர் சங்கம், யாழ்) பிராந்திய கிறிஸ்தவ வாலிபர் சங்கம் ஆகியன இணைந்து உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்குகின்றன

இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்டவர்களுக்கு தலா 1000 ரூபா பெறுமதியான உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன. கடும் பாதிப்பு அடைந்தவர்களுக்கு 800 ரூபா உணவுப் பொருள்களும், ஏனையோருக்கு 400 ரூபா உணவுப் பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. [இ - 125]

## கலாசார உத்தியோகத்தர் போட்டிப் பரீட்சை

கொழும்பு, ஏப். 24
கலாசார உத்தியோகத்தர் [தமிழ்] பதவிக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு வொக்ஷல் வீதியில் அமைந்துள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நடைபெறும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [இ-த]

## கோழிகளுக்கு இலவச ஊசி

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24
எதிர்வரும் 29ஆம் திகதி காலை 9-30 மணிக்கு சுண்டிக்குளிப்பகுதி யாழ். அச்சக வீதியிலுள்ள "கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தில்", கோழிகளுக்கு இலவசமாக நோய்த் தடுப்பு மருந்து ஊசி ஏற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. [இ-த]

## போராளி நினைவாக நூலகம்

கிளிநொச்சி, ஏப். 24
மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பில் வீரமரணம் அடைந்த கப்டன் ரசாத் [சிவசுப்பிரமணியம் சுரேஸ்குமார்] நினைவாக கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத் தலைமை அலுவலகத்தில் நூலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரசாத்தின் தாயார் திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் இதனைத் திறந்து வைத்தார். [இ-26]

## தொழில்நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளர் வெற்றிடம்

கொழும்பு, ஏப்ரல் 24
தொழில்நுட்பக் கல்லூரிகளில் மின்னியல் மற்றும் குளிரூட்டி, குளிரேற்றித் துறைகளைப் போதிக்க விரிவுரையாளர் மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்களைக் கல்வி, உயர் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்பும் கடைசித் திகதி இம்மாதம் 30 ஆம் திகதி ஆகும்.

என். டி. ரி., என். சி. ரி.. சிற்றி அன்ட் கில்ட் - லண்டன் அல்லது அதற்குச் சமமான தரமும் குறிப்பிட்ட துறைகளில் ஐந்து வருட அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

வேண்டிய தராதரங்கள் இருந்தும், குறிப்பிட்ட அனுபவம் இல்லாதிருப்பினும், அத்தகையோரின் விண்ணப்பங்கள் பயிற்சி விரிவுரையாளர் தெரிவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சி விரிவுரையாளருக்கு ஒரு வருட முழுநேர வாக்கிப்பு ஆசிரியயியல் பயிற்சியுடன் தெரிவு செய்து விசேட துறைக்கேற்ற பயிற்சியும் அளிக்கப்படும்.

திருப்திகரமான பயிற்சி முடிவின் பின் அவர் தொழில்நுட்பக் கல்விச் சேவைக்கு நியமனம் பெறுவர். பயிற்சிக் கால ஊதியமாக 2,400 ரூபா மாதம் வழங்கப்படும்.

இது பற்றிய விவரங்கள் 8 - 3 - 1991, 12 - 4 - 1991 வர்த்த மானிகளில் வெளியாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

## உள்ளூராட்சி அமைப்புகள் கூடுதல் அதிகாரம் பெறும்

கொழும்பு, ஏப்ரல் 24
உள்ளூராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்திருக்கிறார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் முடிவடைந்ததும் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி பிரேமதாஸா நீர்கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார். [இ-எ]


## இடம் மாற்றம்

★ ஹப்பி ரெக்ஸ்ற் ★

யாழ்ப்பாணம் 104, ஸ்ரான்லி வீதியில் இருந்து
24-04-1991 தொடக்கம்
யாழ்ப்பாணம் 149, நவீன சந்தைக்கு
இடம் மாற்றப்பட்டுள்ளது
வாடிக்கையாளர்கள் புடைவைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
[16569]



## சுப்றா கல்வி நிலையம்
[BECON கிளை]
பிரதான வீதி, சித்தன்கேணி.

91 A/L கலை, வர்த்தக
மீட்டல் - வினா - விடை வகுப்புகள்
ஆரம்பம்: 23 - 04 - 1991
காலை 9-00 மணி

ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு. S.S. மனோகரன் |
| கணக்கியல் | — | திரு. சிவகுமார் |
| வர்த்தகம் | — | பிரபல விரிவுரையாளர் |
| தமிழ் | — | திருமதி மீரா |
| இந்து நாகரீகம் | — | திருமதி கிருஷ்ணா |
| புவியியல் | — | திரு. சண்முகராஜன் |

91 A/L தமிழ் துரித மீட்டல்
ஆரம்பம்: 23 - 04 - 1991 [செவ்வாய்]
மாலை 4-00 மணி

92 A/L புதிய பிரிவு ஆரம்பமாகின்றது.
திருமதி மீரா.
[4038]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தனியார் பாவிப்பில் உள்ள சைக்கிள் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு; 358, நாவலர் றோட், யாழ்ப்பாணம். [பழைய ரிப்ரொப்] [16564]

### ஏலவிற்பனை

மோகஸ் நல்லின பசுமாடுகள் நான்கு 1991-04-27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கனாசாலை வீதி, திருநெல்வேலி, [இ/5128]

### தேவை

இலுப்பை அரைப்பு தேவை. மிக்கவைற், யாழ்ப்பாணம். [இ/5125]

### புலமைப் பரிசில் பரீட்சை [ஆண்டு 5]

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுக்கும் புதிய கல்வி நிலையத்தால் நடாத்தப்படும் மாதிரி புலமைப் பரிசில் பரீட்சை [முதலாவது] வெளி மாணவர்களுக்கானதும் [மூன்றாவது] உள்ள மாணவர்களுக்குமானதுமான பரீட்சை 28 04-91 ஞாயிறு மு.ப. 8 00, மு. ப.10-30 மணி நேரங்களில் நடைபெறும். பதிவு செய்யவும்: புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்! [16561]

### A/L கணக்கியல் கோட்பாடுகள்

A/L கணக்கியல் கோட்பாடுகள் வெளிவந்து விட்டது: ஆக்கியோன் N ராஜன் B Com விலை 25/- கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை, பிறீஸ்மன் கல்வி நிலையம். [4035]

### மணமகன் தேவை

இந்து 7 இல் செவ்வாய் ராகு சனி உள்ள பெண்ணுக்கு பொருத்தமுடைய செவ்வாய் உள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண் 5' 4'' உயரம் Fair in Complexion இல-305, C/o உதயன் யாழ்ப்பாணம்: [16501]

யாழ் இந்து 26 வயது நிரம்பிய B. Sc. இவில் என்ஜினியருக்கு 7இல் செவ்வாயுள்ள திருகோண நட்சத்திரம் கிரக பாவம் குறைந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்பு: A B C D E விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி' [16488]

### மணப்பெண்கள் தேவை

செவ்வாய்க் குற்றமற்ற 28 வயதுடைய தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கும், 29 வயதுடைய 8இல் செவ்வாயுள்ள பட்டதாரிக்கும் கனடா, சுவிஸ், பிரான்ஸ், நாட்டு குடியுரிமை பெற்றவர்களுக்கும் மணப்பெண்கள் தேவை. ஆ. திருவிளங்கம், 16/16, வனன்புரம், கொழும்புத்துறை. [16489]

### ஆங்கில வகுப்பு

ஆங்கில மொழியை சரளமாக கற்க வேண்டுமாயின் உங்கள் வசதிகளுக்கேற்ப வகுப்புகள் 1 - 5 - 1991 ஆரம்பமாகவுள்ளன. O/L இற்கான விசேட வகுப்புகள் நடைபெறவுள்ளன. செல்வி M. பாலசிங்கம் 21/2, அம்மன் வீதி, சுந்தர்மடம். [16551]

---

## 91 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னையின் மடியில்:
13-2-1970

முருகன் திருவடியில்:
25-1-1991

அமரர்

### சண்முகரெத்தினம் சக்திபாலன்

குடும்பத்தின் ஒளிவிளக்காய், நேர்மையின் இலக்கணமாய், எல்லோருக்கும் வழிகாட்டியாய் இருந்த நீ எம்மைவிட்டு விண்ணுலகம் சென்று 91 நாள் சென்றாலும் உம் நினைவு எம்மைவிட்டு அகலுமா மகனே.

அன்னாரது வீட்டுக்கிருத்தியம் 25-4-1991 நாளை வியாழக்கிழமை காலை 10-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும்; அச்சமயம் யாவரும் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து, மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கிறோம். [தனிப்பட்ட அழைப்புக்கள் தர இயலாமைக்கு வருந்துகின்றோம்].

உம் பிரிவால் துயருறும்,
குடும்பத்தினர்

''சக்தி இல்லம்'',
கொக்குவில்.

[4031]

---

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



### சிவலிங்கம் பிரகாஷ்

அன்பின் அணைப்பில்: 1972 - 09 - 09
ஆறாத் துயரில்: 1991 - 03 - 11

பிரிவுத் துயரம் தாளவில்லை
பிரகாஷ் நீயும் சென்றுவிட்டாய்!
எரியும் தணலாய் ஏக்கங்கள்
எங்கள் நினைவின் துக்கங்கள்!
வசந்தம் தேடிப் புறப்பட்டாய்
வழியில் வந்தது வல்வினையோ?
எங்கள் இதயக் கோட்டைக்குள்
என்றும் இருப்பாய் நினைவாக!

இன்று 24 - 04 - 1991 இல் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையிலும், வீட்டுக்கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

— குடும்பத்தினர்.

''அறிவாலயம்''
இணையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

[16571]

---

வெளிவந்து விட்டது
வேகமாக விற்பனையாகின்றது

### இலங்கை அதிபர்கள் சேவை (S. L. P. S - I, II, III)

போட்டிப்பரீட்சைக்கான வழிகாட்டி

★ கிரகித்தல், ★ பொது அறிவு,
★ கல்விக்கொள்கையும், நிருவாகமும்;

## அஸ்ரன் வெளியீடு

விலை ரூபா 115/-

எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்: [இ/4841]

---

## கலை, வர்த்தக கல்லூரி (C. C. A.) A/L 91

யாழ். வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்

DAY CLASS

கலை, வர்த்தக வகுப்புக்கள்

### ஆரம்பம்: 24-04-1991

காலை 8-00 மணி

முழுப்பாடத் திட்டமும் முடிக்கப்படும்

[இ-4849]

---

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
1924 - 01 - 20

மறைவு:
1990 - 05 - 05

திதி:
1991 - 04 - 24

அமரர்

### சிவகாமசுந்தரி தர்மசூரியலிங்கம்

அம்மா! அம்மா! என்று அலறினோம் ஆருயிரே சும்மா கிடப்பதுபோல் தூயவளே எங்கள் அம்மா நெஞ்சகத்தில் எங்கள் நினைவு தடுமாற முன்பு, பஞ்சுபோல் விட்டகன்று பரமனடி சேர்ந்தனையே! உங்கள் ஆத்மா சிவப்பேறெய்த வேண்டி நிற்கும்,

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிறோபதி,
8 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

[16462]

---

## ஈராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 02 — 04 — 1963

தாயக மண்ணில்: 24 — 04 — 1989

### கப்டன் ரங்கன்

(துரைசிங்கம் ஜெயரங்கன்)

மண்ணினை நேசித்த மைந்தனே! - உன்
மனவெழுச்சி காதுகளில் கேட்கிறது
விண்ணதிரும் வெடிகள் விசையியக்கி - பெரு
வீரமுடன் போரிட்டாய் எம் ரங்கா!
சன்னையை சுதந்திரத்தைப் பெற்றிடுதல் - எம்
கடமையெனக் கூறிடுவாய் தர்மவீரா!
எண்ணத்தில் நிழலாடு முன்தோற்றம் - என்றும்
எம்மோடு உறவாடு முன்னாத்மா.

அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
தம்பிமார், தங்கைமார்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு. [4034]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பொது நலமும் எமது வளமும்

போர்ச் சூழ்நிலை காரணமாக மக்களுக்குப் பல புதிய தேவைகள் தோன்றி உள்ளன. அவற்றில் பெருமபாலானவை அத்தியாவசியமானவை ஆகிவிட்டன. அவ்வாறான சில தேவைகளை மக்களுக்குச் சேவையாகச் செய்யும் நோக்குடன் 'பாலம்' என்ற பொதுப்பணி மன்றம் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, உதவிக்கு நின்று பராமரிக்க உறவினர் இல்லாத நோயாளருக்கு தொண்டு அடிப்படையில் உதவி செய்தல். குறிப்பாக வெளிமாவட்டங்களில் இருந்து வந்து பராமரிக்க எவருமின்றிக் கஷ்டமுறும் ஆபத்தான நோயாளிகளைப் பராமரித்தல்.

போக்குவரத்தைத் தொடர வழியின்றி இரவை நகரில் கழிக்க வேண்டிய தேவை ஏற்படுவோருக்குத் தங்குமிட வசதி அளித்தல்.

உண்மையாகவே பாதிக்கப்பட்டு, நிவாரணம் பெற முடியாமல் அவஸ்ப்படுவோருக்கு, நீதியின் அடிப்படையில் நிவாரணம் சென்றடைய வேண்டியவர்களுக்கு, அது கிடைக்க உதவுதல்.

ஆரம்பத்தில் இந்த மூன்று பணிகளையும் தொண்டாக, சேவையாகச் செய்யப் 'பாலம்' முன்வந்திருக்கிறது.

ஒருவர் மீது மற்றவர் கரிசனையுள்ள பிரஜையாக, உதவி செய்து வாழ்கின்ற ஒரு பழக்கத்தை, இவ்வாறான பணிகள் மூலம் உருவாக்கலாம் என்று பாலத்தைத் தோற்றுவித்துள்ளவர்கள் நம்புகிறார்கள்.

ஒருவர் மற்றவருக்காகவும் எல்லோரும் எல்லோருக்காகவும் வாழப்பழகுதல் மிக அவசியம். குறிப்பாக சுயநலம் மிகுந்து காணப்படும் எமது சமுதாயத்தில், சகோதரத்துவம், பொதுநலம், அடுத்தவன் அவலத்தில் பங்கு கொண்டு அதனைத் தீர்க்க முயல்வது என்பன மிகக் குறைவு.

அவற்றின் அவசியத்தை, தேவையை உணர்த்தும் விதத்தில், நிறுவன ரீதியாகச் செயற்பட முன் வந்திருக்கும் பாலம் பாராட்டப்பட வேண்டியது. எமது மக்கள் சுயநலக்காரர்கள் என்று வெறுமனே சொல்லிக் கொண்டிருப்பதை விட, அவர்களைத் திருத்த முயலும் பணி என்று கூட இத்தகைய தொண்டைக் கூறலாம்.

தாம் செய்ய நினைத்துள்ள பணிகளை, உள்நாட்டு வளங்களைத் திரட்டியே செயற்படுத்தப்போவதாக பாலத்தின் அமைப்பாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

எமது பிரதேசத்தில் சகல வளங்களும் உண்டு. அவற்றைப் பயன்படுத்தியே எங்கள் மக்களுக்கு வாழ்வளிக்கலாம்; அவர்களின் அவலங்களைப் போக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே 'பாலம்' தமது சேவையைத் தொடங்கி உள்ளது.

இவ்வித நம்பிக்கை எல்லோருக்கும் வரவேண்டும். எங்களிடம் எதுவும் இல்லை என்று சொல்வது தரித்திரம். அப்படிக் கூறுவதற்குப் பதிலாக, என்ன வளமில்லை எங்கள் திருநாட்டில் என்ற கேள்வியை எழுப்பி, தமிழ் மண்ணினதும், மக்களினதும் வளங்களை இனங்கண்டு, அவற்றை ஊற்றெடுக்க வைத்துப் பயன்படுத்த வேண்டும்.

உரிமைகள் கிடைத்த பின்னர் இதனைச் செய்வோம் என்று நாளைக்குத் தள்ளி வைக்காமல், இன்றே ஆயத்தம் செய்வது பிரதானம்.

# குடாநாட்டில் பரீட்சார்த்த கம்புப் பயிர்ச்செய்கை வெற்றி

## உணவுத் தேவை பூர்த்தியாகும் வாய்ப்பு

மானிப்பாய், ஏப்ரல் 24

தமிழீழ ஆய்வு நிறுவனத்தினர் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கம்புப் பயிரை அறிமுகப்படுத்தியுள்ளனர். பரீட்சார்த்தமாக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு அது வெற்றி அளித்துள்ளது.

அம்பன், பண்டத்தரிப்பு, கோப்பாய், அராலி போன்ற பகுதிகளில் கம்புப் பயிர்கள் சிறந்த முறையில் விளைவிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்பயிர் சிறந்த விளைவை ஏற்படுத்துமிடத்து இப்பகுதி மக்களின் உணவு தேவையில் கணிசமான அளவு நிறைவை ஏற்படுத்தும் என நம்பப்படுகின்றது.

கம்புப் பயிர் வன்னிப்பிரதேசம், கிளிநொச்சி பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 300 கிலோவுக்கு மேல் இதுவரை விநியோகிக்கப்பட்ட இப்பயிரில் இருந்து ஒரு ஏக்கருக்கு சுமார் ஆயிரம் மெற்றிக் தொன் கம்புத் தானியம் பெறமுடியும் என எதிர்பார்ப்பதாக நிறுவன உத்தியோகத்தர் தெரிவித்தார்.

தற்பொழுது வழங்கப்பட்ட இப்பயிர் மீண்டும் விதைப்பெருக்கத்தை உண்டு பண்ணுவதற்காகவே வழங்கப்பட்டுள்ளது எனவும், கம்புப் பயிரைப்போல சோளப் பயிரும் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [இ-12-90]

# வட இலங்கை சங்கீத சபை செய்முறைப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப். 24

வடஇலங்கைச் சங்கீதசபை நடத்தும் தரம் ஒன்று தொடக்கம் நான்கு வரையிலுமான 1991ஆம் ஆண்டுக்குரிய செய்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி மே மாதம் 5ஆம் திகதிவரை நடைபெறும்.

பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைக் கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சகருக்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை 25ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சேவைசெய்த இசை ஆசிரியர்களும், மிருதங்க நடன ஆசிரியர்களும் இக்கூட்டத்தில் பங்குபற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐந்தாம், ஆறாம் தரத்துக்கான செய்முறைப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். [இ]

## பௌர்ணமி தின கலை, கலாசார விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 24

கச்சேரி கிழக்கு சனசமூக நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பௌர்ணமி தின கலை, கலாசார விழா அண்மையில் நடைபெற்றது.

திரு. இ. இராசையா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [இ-த]

# திட்டமிட்டபடி வருட முடிவில் ஜி. சீ. ஈ. பரீட்சைகள்

கொழும்பு, ஏப்ரல் 24

இந்த ஆண்டு இறுதியில் திட்டமிட்டபடி ஜி. சீ. ஈ. உயர்தரம், ஜி. சீ. ஈ. சாதாரணதரம் ஆகிய பரீட்சைகள் நடத்தப்படும்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இதனைக் கொழும்பில் தெரிவித்தார்.

1991 இறுதியில் கொழும்பில் சார்க் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட இருப்பதால் இப்பரீட்சைகள் ஒத்திப்போடப்படலாம் என்ற தகவல் தவறானது என்றும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்தார்.

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி ஆகஸ்ட் 3 முதல் ஆகஸ்ட் 27 வரையும்—

ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சை டிசம்பர் 9 முதல் டிசம்பர் 18 வரையும் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார். [இ-த]

# ஜனதா தள் கட்சியிலிருந்து அருண்நேரு வெளியேற்றம்

புதுடில்லி, ஏப். 24

கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக ஜனதா தள் கட்சியில் இருந்து திரு. அருண்நேரு வெளியேற்றப்பட்டார்.

வி. பி. சிங் தலைமையிலான ஜனதா தள் அரசாங்கத்தில் அருண்நேரு வர்த்தகத்துறை அமைச்சராகப் பதவி வகித்திருந்தார்.

அருண்நேருவுடன் முன்னாள் மத்திய அமைச்சர்களான ஆரிப்கான், சத்யபால் மாலிக் ஆகியோரும் ஜனதா தள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர் என்று கட்சிப் பேச்சாளர் ஜெய்பால் ரெட்டி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

செயலிழந்து போன ஜன் மோர்ச்சா கட்சியை புனரமைப்புச் செய்வதில் இந்த முன்னாள் அமைச்சர்கள் ஈடுபட்டிருந்தனர். [அ-எ]

# ராஜீவின் பிரதம ஆலோசகர் மயிலாடுதுறையில் போட்டி

சென்னை, ஏப்ரல் 24

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிரதம ஆலோசகராகத் தற்போது பணிபுரியும் திரு. மணிசங்கர் ஐயர் தமிழ்நாட்டில் மயிலாடுதுறைத் தொகுதியில் இருந்து இந்திராகாங்கிரஸ் வேட்பாளராக நாடாளுமன்றத்திற்குப் போட்டியிடுகின்றார்.

திரு. மணிசங்கர் ஐயர், திரு. ராஜீவ் காந்தியின் பால்ய நண்பர்.

திரு. ராஜீவ் காந்திக்கு அவரது பேச்சுக்களைத் தயாரித்துக் கொடுத்து வரும் பணியில் திரு. மணிசங்கர்ஐயர் தற்போது ஈடுபட்டு வருகிறார்.

இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்ற வேட்பாளர்களாகப் பின்வருவோர் தமிழ்நாட்டில் போட்டியிடுகின்றனர்:

மத்திய சென்னை: இரா. அன்பரசு, ஸ்ரீ பெரும்புதூர்: திருமதி மரகதம் சந்திரசேகர், கிருஷ்ணகிரி: வாழப்பாடி இராமமூர்த்தி, திண்டிவனம்: கே. இராமமூர்த்தி, தர்மபுரி: கே. தங்கபாலு, சிவகங்கை: ப. சிதம்பரம், சேலம்: ரங்கராஜன் குமாரமங்களம், நீலகிரி: ஆர். பிரபு, தென்காசி: எம். அருணாசலம், திருச்செந்தூர்: தனுஷ்கோடி ஆதித்தன். [இ-எ]

## பதுங்கு குழிக்குள் 19 முட்டைகளுடன் நாகபாம்பு

பதுங்கு குழியைத் துப்புரவு செய்ய இறங்கிய ஒருவர், பதுங்கு குழிக்குள் 19 முட்டைகளுடன் இருந்த நாகபாம்பைக் கண்டு திகைப்படைந்தார்.

இச்சம்பவம் சங்கத்தானையில் உள்ள கண்டுவில் ஒழுங்கையில் இடம்பெற்றது.

தனது அயல் வீட்டுக்காரரின் பதுங்குகுழிக்குள் பாம்பு இருந்ததைக் கேள்வியுற்று, தனது பதுங்குகுழியையும் துப்புரவு செய்யச் சென்றபோதே வீட்டுக்காரருக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. [இ-த-117]

## கசிப்பு உற்பத்தி கண்டுபிடிப்பு

புங்குடுதீவு 10ஆம்வட்டாரப் பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர் என்றுகூறப்படும் இருவருக்கு விடுதலைப் புலிகளால் அபராதம் விதிக்கப்பட்டது. [இ-125]

# அளவான சமபல உணவு மூலம் மக்கள் சுகதேகியாக வாழ முடியும்

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சங்க சமாஜம், தெங்கு பனம்பொருள் உற்பத்திச் சங்கம், சுகாதாரத் திணைக்களம் ஆகியவை இணைந்து போஷாக்கின்மை பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு ஒன்றை கடந்த 20 ஆம் திகதி நல்லூர் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடத்தின. கருத்தரங்கில் நிகழ்த்தப்பட்ட சில உரைகள் வருமாறு:-

### டாக்டர் எஸ். நச்சினார்க்கினியன்

மனித அடிப்படைத் தேவைகளில் உணவு, உடை, உறைவிடம், பாதுகாப்பு என்பன மிகவும் அத்தியாவசியமானவை.

போஷாக்கின்மையால் [illegible]கள் கூடக் வளர்ச்சி குன்றி வருகின்றனர். உள்ளூர் உற்பத்தி மூலம் வீட்டுத் தோட்டங்களை அதிகரிப்பதன் மூலமும் போஷாக்கின்மையை நீக்க முயல வேண்டும்.

### டாக்டர் என். சிவராஜா

போஷாக்கின்மை பல மட்டங்களிலும் வடிவங்களிலுமுள்ளது.

சிசுக்கள், பாடசாலை முன்னிலைப் பிள்ளைகள், பாடசாலைப் பிள்ளைகள், வாலிப வயதினர், கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர் ஆகியோர் இதனால் பாதிக்கப்படுகின்றனர்.

குழந்தைகளுக்கு போஷாக்கின்மை ஏற்படும்போது நெஞ்சில் சளி, வயிற்றோட்டம் முதலியன ஏற்படுகின்றன. இவை ஒன்றோடொன்று தொடர்புடையன. குழந்தைகளுக்கு ஆறு மாதம் வரையிலாவது தாய்ப்பால் [illegible] ம் உப உணவு கொடுக்கவேண்டும். 3 மாதம் தொடக்கம் 6 மாதம் வரை குழந்தைகள் ருசியை உணரும் தன்மை பெறுகின்றனர் எனவே உப உணவு வகைகளை இக்கால கட்டத்தில் கொடுக்கத் தொடங்க வேண்டும். எப்போது குழந்தையின் வளர்ச்சி குறைகின்றதோ அப்போதே போஷாக்கின்மை ஆபத்து ஆரம்பமாகிறது.

இக்காலத்தில் சத்துள்ள உணவைக் கொடுக்க வேண்டும்கர்ப்ப காலத்தில் தாய்மார் அருந்தும் சத்துள்ள உணவு மூலம் நிறைவுள்ள குழந்தையைப் பெறலாம். அநேகர்களுக்கு இரும்புச்சத்துக் குறைபாட்டால் இரத்தச்சோகை ஏற்படுகிறது. இலை வகைகள் பருப்பு, மீன், பால், பழம், சாப்பிடுவதன்மூலம் போஷாக்கின்மையை நீக்கலாம்.

### டாக்டர் யோகவிநாயகம்

போஷாக்கின்மை வறுமையால் ஏற்படுகிறது என மக்கள் நம்புகிறார்கள். வறுமையின் ஆணிவேர் அறியாமை கிடைக்கும் வருமானத்தோடு அறிவையும் கூட்டினால் போஷாக்கின்மையை நீக்கலாம். குசிக்கு முக்கியத்துவம் கொடுக்காது குறைந்த செலவில் சத்துள்ள நிறை உணவை உண்பதன் மூலம் போஷாக்கின்மையை நீக்கலாம்.

### சுகாதார அதிகாரி கே வைத்தீஸ்வரன்

பெண்கள் கர்ப்பம் தரிக்கும் காலத்தில் போதிய நிறை உணவை அருந்தினால் இரத்தச் சோகையைத் தவிர்க்கலாம். பிரசவம் ஆன பின்னரும் பெண்கள் குறுவாகிய காலங்களிலும் நீராகாரம் கொடுக்கக்கூடாதென்பது மூடநம்பிக்கை. சராசரி ஒரு நபர் ஆறு போத்தல் தண்ணீர் குடிக்கவேண்டும். சிலர் சிறிய மீன்கள் இலை வகைகள் கறணைக்கிழங்கு என்பனவற்றை உண்பது குறைவு இவற்றில் கூடிய சத்துக்கள் உள்ளன. பலர் குசிக்கு முதலிடம் கொடுப்பதால் இருதய வியாதி, சலரோகம், அதி இரத்த அமுக்கம் முதலியவற்றிற்கு ஆளாகிறார்கள். அளவான சமபல உணவை உண்பதன் மூலம் சுகதேகிகளாக வாழலாம். [இ-18]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. (உயர்) பரீட்சை நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், ஏப். 24
வடக்கு - கிழக்கிற்கான விசேட ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை நேற்று ஆரம்பமாகியது.

யாழ். மாவட்டத்தில் 68 நிலையங்களில், முதல் நாளான நேற்று பரீட்சை அமைதியாக நடைபெற்றதாக பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கல்விப் பணிப்பாளர் நேற்று சில பரீட்சை நிலையங்களுக்கு விஜயம் செய்து நிலைமையை நேரில் அவதானித்தார்.

பரீட்சைக்கு விண்ணப்பித்திருந்தோரில் சுமார் 50 சதவீதத்தினர் சமுகமளித்திருந்ததாக உத்தேசமாக மதிப்பிடப்பட்டது.

[ரு 5-15]

## நானாட்டானில் படையினர்

யாழ்ப்பாணம், ஏப் 24
மன்னார் செம்மண்வீதி, முருங்கன்பிட்டி, மாவிலங்கேணி, பூவரசங்குளம் ஆகிய பகுதிகளில் நிலை கொண்டிருந்த ஸ்ரீலங்கா படையினர் கடந்த ஞாயிறன்று நானாட்டான் பகுதிக்குச் சென்றுவிட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

[உ]

## பட்டப்பகலில் தங்கச் சங்கிலி பறிபோனது

சுழிபுரம் பகுதியில் நேற்று முன்தினம் பட்டப்பகலில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண்மணியிடம் சைக்கிளில் வந்த ஒருவர், தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு, ஓடி மறைந்து விட்டதாகக் கூறப்பட்டது.

சுழிபுரம், கம்பனையைச் சேர்ந்த திருமதி ஏரம்பு பூமாதேவி என்பவரே சங்கிலியைப் பறிகொடுத்தவர் ஆவார்.

[ஒ-28]

## சிப்பாய் அபேஸ் செய்த ரூ. 12 ஆயிரம்!

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவர், வவுனியா இராணுவச் சிப்பாயிடம் 12 ஆயிரம் ரூபாவை பறிகொடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ 'சென்றி'யில் சோதனை நடந்தபோதே இந்தப் பணம் கைமாறி விட்டதாகச் சம்பந்தப்பட்டவர் தெரிவித்துள்ளார். கடந்த வியாழக்கிழமை நண்பகல் இச்சம்பவம் நடைபெற்றது.

பணத்தை 'அபேஸ்' செய்த சிப்பாய் சில நிமிடங்களில் அவ்விடத்தில் இருந்து மெதுவாக நழுவி விட்டதாக பணத்தைப் பறிகொடுத்த வடக்கம்பிரையைச் சேர்ந்த தா. க. பிள்ளை என்பவர் உதயனுக்குத் தெரிவித்தார். [ஒ-28]

# ஐரோப்பிய நீதிமன்றில் இலங்கைத் தமிழர் வழக்கு

இலங்கைத் தமிழர்கள் மூவருக்கு லண்டனில் அடைக்கலம் அளிக்க மறுத்து அவர்களைத் திருப்பி அனுப்பியது குறித்து ஐரோப்பியாவின் மனித உரிமைகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

1988 ஆம் ஆண்டில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்ட மூன்று தமிழர்கள் பின்னர் குடியேற்ற நடுவருக்கு முறையிட்டதன் பேரில் பிரிட்டன் வர அனுமதிக்கப்பட்டிருந்தது.

அவர்கள் முதலில் திருப்பி அனுப்பப்பட்டது குறித்தே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு விசாரணை நேற்று நடைபெறுவதாக இருந்தது.

[அ-5]

# வவுனியாப் படையினர் பொதுமக்கள்மீது தாக்கு

யாழ்ப்பாணம், ஏப், 24
வவுனியா சோதனை முகாமில் நிற்கும் படையினர் அப்பகுதியினூடாகச் சென்று வரும் பொதுமக்களை கடுமையாகத் துன்புறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் வவுனியா நகரில் பொருள்களை வாங்கிக்கொண்டு வந்த ஒரு பெண்ணிடம் பொருள்களை பறித்த படையினர் அப்பெண்ணை பாலியல் வன்முறைக்கு ஆளாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் வேறு மூன்று பயணிகள் படையினரால் தாக்கப்பட்டனர். அவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மாதர் பணிக்கமுழத்தைசேர்ந்த பெண் ஒருவரிடம் தலையில் படையினர் பெற்றோலை ஊற்றி அவரை த்தாக்கியதாகவும் கூறப்பட்டது. வவுனியா நகருக்குச் சென்றுவிட்டு மாலை 5 மணிக்கு பின்னர் வந்த பொது மக்களை தாண்டிக்குளம் பகுதியில் மது போதையில் நின்ற இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

இதேசமயம்—

நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் தாண்டிக்குளம் பரிசோதனை முகாமில் வைத்து ஒட்டிசுட்டானைச் சேர்ந்த எஸ். சுரேஸ்குமார் என்ற இளைஞர் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

## ஒட்டகப்புலத்தில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 24
பலாலி ஒட்டகப்புலம் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று பிற்பகல் ஒருமணியளவில் மோதல் நிகழ்ந்தது.

சுமார் அரை மணிநேரம் நடந்த சண்டையில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான இரண்டாவது லெப்டினன்ட் மீரான் [சண்முகராசா கிருபாகரன்-காரைநகர்] என்ற போராளி வீரமரணமடைந்தார்.

படையினருக்கு ஏற்பட்ட சேதம் குறித்து தெரியவரவில்லை.

[ஒ-5]

## மேதினத்தை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னத்திற்காக பெரும் ஊர்திகள் அமைக்கப்பட்டு உருவாகத் தெரியவருகிறது.

தீவுப்பகுதியில் இருந்தும் பெரும் எண்ணிக்கையான மக்கள் மேதினப் பேரணியில் கலந்து கொள்ள இருப்பதால், அவர்களின் போக்குவரத்து வசதி கருதி படகுகள் மற்றும் வாகன வசதிகளைச் செய்து கொடுக்கவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

மேதினம் சம்பந்தமாக, அவ்வப்பகுதிகளிலுள்ள தொழிற்சங்கங்கள், வர்த்தகர் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், பொது விதானங்கள் ஒன்று கூடி, வாகன ஒழுங்குகள், வீதிகளின் சோடனை போன்றவற்றைச் செய்ய இருக்கின்றன. அதற்காக மேற்கண்ட அமைப்புகள் கூட்டங்களை நடத்தி முடிவுகளை மேற்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி மற்றும் வன்னி மாவட்டங்களிலும் மேதினத்தை வெகு கோலாகலமாகவும்— உணர்வு பூர்வமாகவும் கொண்டாடுவதற்குத் தேவையான சகல ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

[ஒ]

## மருதனார்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பிரசாரப் பொறுப்பாளர் பரா பேசுகையில், ''மக்கள் இந்த எழுச்சி விழாவில் பெருமளவு கலந்து கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி பேசுகையில், ''இங்குள்ளத் தலைமையைத் தூக்கி எறிந்துவிட்டு தமிழர் தலைமையை தொழிலாளர் வர்க்கம் ஏற்க வேண்டும்''— என்றார்.

அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் ராஜன் பேசுகையில், ''போக்குவரத்துக் கஷ்டங்கள் இருந்தாலும் மக்கள் நடந்து வந்தாவது மேதினக் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்'' என்றார். [இ]

## விடைத்தாள்கள் கப்பலில் எடுத்துச் செல்லப்படும்

எதிர்வரும் மே 18 ஆம் திகதி முடிவடையும் விசேட ஜி. சீ. ஈ. பரீட்சை விடைத்தாள்கள் இங்கிருந்து கொழும்புக்குக் கப்பலில் எடுத்துச் செல்லப்படும்.

அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வட பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ் கல்வி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் இங்கிருந்து கொழும்புச்சென்று, கொழும்பு துறைமுகத்தில் வைத்து விடைத்தாள்களைப் பொறுப்பேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஒ-5]

## பத்திரிகை ஆசிரியர் கொலை; பல நாளிதழ்கள் நிறுத்தம்

ஸ்ரீநகர், ஏப் 24
ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் இருந்து வெளிவரும் 'அல் சபா நியூஸ்' பத்திரிகையின் ஆசிரியர் முகமட் சமீன் வக்கில் என்பவரை இரண்டு தீவிரவாதிகள் நேற்றுப் பகல் சுட்டுக் கொன்றனர் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தக் கொலையைக் கண்டிக்கும் வகையில் ஸ்ரீநகரிலிருந்து வெளியாகும் ஏனைய பத்திரிகைகள் வெளியிடுவதை காலவரையறையின்றி நிறுத்தி வைப்பது என்று அவற்றின் வெளியீட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

[உ-எ]

## பாதுகாப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

னும் இவ்வேளையில் இம்முறை மேதினம் நடைபெற இருக்கிறது.

வடக்கு, கிழக்குத் தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகள் ''குட்டிப் பொதுத் தேர்தல்'' ஒன்றிற்கு கூடாக ஆயத்தமாகி வரும் வேளையில்— தேர்தலுக்கு பதினைந்து தினங்களுக்கு முன்னர் கொழும்பில் மேதினத்துக்காக மக்கள் கூட்டம் திரள இருக்கிறது.

அரசியல் பதற்றம் நிலவும் இவ்வேளையில் தலைநகரில் நடக்கும் மேதினக் கூட்டங்கள், ஊர்வலங்கள் போன்றவற்றில் வன்செயல் சம்பவங்களைக் கட்டவிழ்த்துவிட்டு அதன் மூலம் அரசுக்கு எதிரான அரசியல் லாபம் தேட சில சக்திகள் முனையக்கூடும் என்று அரச தரப்பில் சந்தேகிக்கப்படுகிறது.

அதன் காரணமாகவே இம்முறை வழமைக்கு மாறாக மேதினத்தை ஒட்டி தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் நேரகாலத்துடனேயே செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-ஒ-எ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப். 24
கடந்த பெப்ரவரி 10 ஆம் திகதி ஸ்ரீலங்கா இராணுவத்துடனான மோதல் ஒன்றில் காயமுற்றிருந்த மதி [தர்மராசா தயாபரன் - செம்பியன்பற்று] என்ற போராளி நேற்று முன்தினம் வீரமரணமடைந்தார்.

[உ]

## இந்தியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வம் குறித்து இலங்கை அரசு இந்தியாவிடம் வருத்தம் தெரிவித்துள்ளது. இத்தகவலைக் கொழும்பில் வெளியுறவுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

[அ]


சாவகச்சேரி நகராட்சி மன்றம்
ஆதன வரி இறுப்பாளர்களுக்கு
ஒரு விசேட அறிவித்தல்

சாவகச்சேரி நகராட்சி மன்ற எல்லைக்குள் உள்ள ஆதனங்களுக்குரிய 1991 ஆம் ஆண்டு 1ஆம் காலாண்டிற்கான தொகைக்கு தண்ட அறவீடு எதுவுமின்றி 30-4-91 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரை செலுத்துவதற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 1991 ஆம் ஆண்டு 2ஆம், 3ஆம், 4ஆம் காலாண்டிற்கான தொகைகளை இக்காலப் பகுதிக்குள் செலுத்துபவர்களுக்கு 5% வரிக்கழிவு வழங்கப்படும்.

எனவே, சகல ஆதனச் சொந்தக்காரர்களும் இச் சலுகையைப் பயன்படுத்தி 30.4.91க்கு முன் தமது ஆதன நிலுவைகளைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இத்திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரியுடன், வதிவிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் [15%] ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் [20%] கூடுதலாக அறவிடப்படும் என்பதை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.

[சி/5949]



மரண அறிவித்தல்கள்

நாகம்மா கார்த்திகேசு

காலம்சென்ற மலேயன் பென்சனியர் கார்த்திகேசுவின் அருமை மனைவி திருமதி நாகம்மா கார்த்திகேசு 20-4-91 சனிக்கிழமை சங்கரத்தையில் காலமானார். அன்னார் காலம்சென்ற தர்மலிங்கம் [மலேசியா], காலம்சென்ற சண்முகநாதன் [பிரதி அத்தியட்சகர், நீர்ப்பாசன இலாகா], பாக்கியம், பரமநாதன் [மலேசியா], அருமைநாதன் [மலேசியா], பஞ்சலிங்கம் [C. M. L. T. மகரகம புற்றுநோய் வைத்தியசாலை], மகாலிங்கம் [புருணை], நாகலிங்கம் [Eng. Cons Ltd], நவரட்ணம் [U. K.] செல்வஇலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், சேனாதிராஜா [ஓய்வுபெற்ற தொலைத் தொடர்பு உதவி நிர்வாகச் செயலாளர்] ஜெயரஞ்சிதன் [கணக்காளர்—ஷப்றா], இராஜேஸ்வரி [தெகிவளை], சுசிலா [மலேசியா], தவம் [மலேசியா], இந்திராணி [புருணை], வள்ளிநாயகி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியை 25-4-91 வியாழக்கிழமை நடைபெற்று காலை 9 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். தயவு செய்து இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. ஜெயரஞ்சிதன்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

[16514]

தருமலிங்கம் செல்லப்பா

சரசாலை தெற்கைச் சேர்ந்த இளைப்பாறிய நெசவு ஆசிரியர் தருமலிங்கம் செல்லப்பா காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [புதன்கிழமை] பி. ப. 4 மணியளவில் நடைபெற்று வேம்பிராய் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
செ. நகுலேஸ்வரதாஸ்

[16515]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 [illegible] கத்தில் உள்ள அச்சகத்தில் 24-04-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org